DEPOSITION OF WITNESSES

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.2 SRIVAIKUNDAM

| | |
|---|---|
| Case No | CC.446 / 2015 |
| Depostition of witness for | Prosecution wit. PW. 1 |
| Name | திரு. குணபாலன் |
| Father Name | பொன்னுசாமி நாடார் |
| Village | பொடியலூர் |
| Taluk | |
| caste | |
| calling | |
| Religion | |
| Age | 67 |

**( எதிரி ஆஜரில்லை: எதிரிதரப்பில் கு.வி.மு.ச பிரிவு 317(2)ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பில் வழக்கறிஞர்கள் ஆஜர்) )**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the 17-12-2024.(நேரம்: 03.15PM )**

**முதல்விசாரணை**

1. நான் தற்போது பொடியனூரில் குடியிருந்து வருகிறேன்.

2. நான் விவசாய வேலை செய்து வருகிறேன்.

3. இறந்துபோன அலக்ஸ் என்பவரை எனக்கு தெரியும்,

4. சாட்சிகள் பாப்பா, பிருந்தா, அனிதா, தேன்மொழி ஆகியோரை எனக்கு தெரியும், பாப்பா எனது மனைவி, பிருந்தா எனது மகள், அனிதா தேன்மொழியின் மகள் ஆவார்.

5.கடந்த 28.08.2013 அன்று காலையில் திருச்செந்தூர் கோவிலுக்கு நானும் , எனது மனைவி பாப்பா , பிருந்தா, அனிதா, தேன்மொழி, விக்னேஷ் ஆகியோர்களுடன் ஆமுனி வேனில் சென்றோம்.

6. சாமி கும்பிட்டு விட்டு வரும்போது ராஜாங்கபுரத்திற்கு மேற்கே வரும்போது எதிரே வந்த டாடா ஏசி வண்டி தாருமாறாகவும் , வேகமாகவும் வந்து நாங்கள் வந்த ஆமுனி வண்டிணை இடித்து விட்டது.

7. எனக்கு முதுகில் பின்பகுதியில் காயமும் , முன்பக்க நாக்கில் அடிப்பட்டது, எனது மனைவி பாப்பாவிற்கு கையில் அடியும் , நெற்றியில் வெட்டுபட்டு ரத்தமும் , பிருந்தாவிற்கு வலதுபக்க நெற்றியில் அடித்து ரத்தகாயமும் , அனிதாவிற்கு வலதுபக்க கண்ணத்தில் காயமும், தேன்மொழிக்கு கையிலும், காலிலும் ரத்தகாயம், விக்னேஷ்க்கு வலது பக்க காலில் லேசான காயமும் , டிரைவர் ஜெகனுக்கு கால் மாட்டி நெஞ்சில் ஸ்டிரிலிங்கால் அடிப்பட்டது.

8. பின்பு 108 வந்து ைஹகிராவுண்ட் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றோம். அங்கு போலிஸ் வந்து என்னிடம் வாக்குமூலம் கேட்டார்கள்.

9.அந்த விபத்திற்கு எங்களுக்கு எதிரே ஓட்டிவந்த டாடா ஏசி ஓட்டுனர் , வைகுண்டராமன் என்பவரே காரணம்.

10. இந்த விபத்தானது, எதிரே வந்த டாடா ஏசி வண்டி தாறுமாறாக வந்ததால் தான் காரணம்.

11. என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள குணபாலன் என்ற கையெழுத்து என்னுடையது தான் . இது நான் கொடுத்த புகார் வாக்குமூலம் தான் . இதில் என்ன எழுதியிருக்கும் என்ற விவரம் எனக்கு தெரியும் . **அந்த புகார் வாக்குமூலம் அசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**12.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை.

சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில்சாட்சி சொல்ல, சொல்ல என்னால் தட்டச்சருக்குசொல்லப்பட்டு, அவரால் கனிணியில் பதிவு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு ஒப்புக்கொண்டு கையெழுத்து பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண். 2
ஸ்ரீவைகுண்டம்.